பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

02 07 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் நிலையான மற்றும் உறுதியான அரசுக்கு மக்கள் வாக்களித்திருப்பது உத்வேகம் அளித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. உத்திரபிரதேசத்தின் ஹத்ராஸ் மாவட்டத்தில் ஆன்மீக நிகழ்ச்சியின்போது நேரிட்ட கூட்ட நெரிசில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர்.
3. இந்திய அரசு உதவியுடன் யாழ்ப்பாணத்தில் குடிநீர் தேவைக்காக தொள்ளாயிரத்து 34 மழைநீர் சேகரிப்பு டேங்குகளை அமைக்க இலங்கை அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
4. ஆஸ்திரேலியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களுக்கான விசா கட்டணம் இரண்டு மடங்குக்கும் கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது.
5. ஜிம்பாப்வேவுக்கு எதிரான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி இன்று ஹராரே புறப்பட்டு சென்றது.

இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் நிலையான மற்றும் உறுதியான அரசுக்கு மக்கள் வாக்களித்திருப்பது அரசுக்கு உத்வேகம் அளித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை வழங்கிய பிரதமர், மக்களின் நம்பிக்கையை பெற்றதால்தான் மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைந்ததாகத் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் முதிர்ச்சியுடனும், தேர்ந்த அறிவுடனும் வாக்குகளை அளித்ததாக அவர் புகழாரம் சூட்டினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் அரசு எடுத்த கொள்கை முடிவுகளில் நம்பிக்கை வைத்துள்ளதால்தான் மூன்றாவது முறையாக தேசிய ஜனநாயக் கூட்டணியை மக்கள் மத்தியில் ஆட்சியில் அமர்த்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிற்கு முதலிடம் மற்றும் ஊழலை முற்றிலுமாக அகற்றுவது ஆகிய கொள்கைகளை கடைபிடிப்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக அவர் கூறினார்.

அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு பின்பற்றி வருவதாகவும், யாரையும் போலியாக திருப்திபடுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அடைந்த தோல்வியை மறைப்பதற்காக தவறான தகவல்களை அளித்து வருவதாகவும் பிரதமர் குற்றம்சாட்டினார்.

அவையில் நடைபெற்ற இந்த விவாதத்தின்போது, அக்னிவீர் திட்டம் குறித்தும், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை குறிததும் எதிர்க்கட்சிகள் சார்பில் தவறான தகவல்கள் அளிக்கப்பட்டதாக அவர் குறை கூறினார்.

அனைவரின் பங்களிப்பில் அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நேற்று தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக பிஜேபி சார்பில் அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா-விடம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய திரு ராகுல்காந்தி, உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டதாக பிஜேபி உறுப்பினர் திருமதி பன்சூரி ஸ்வராஜ் அளித்த நோட்டீஸில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் பேசியது உண்மையை மறைத்து திசை திருப்பும் வகையில் அமைந்துள்ளதாகவும், அது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை அவைத்தலைவர் எடுக்க வேண்டுமென்றும் அந்த நோட்டீஸில் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே திரு ராகுல்காந்தி அவைத்தலைவர் திரு ஓம் பிர்லாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், நேற்று தாம் தெரிவித்த கருத்துக்களின் பல பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும், மக்கள் நலன் கருதி எதிர்க்கட்சிகள் சார்பில் தாம் தெரிவித்த அந்த கருத்துக்களை மீண்டும் அவைக்குறிப்பில் சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நீதித்துறையின் அடிப்படை கொள்கை கட்டமைப்பை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லி கார்கர்டுமாவில் கட்டப்படவுள்ள மூன்று நீதிமன்ற கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், மக்களின் எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கையையும் அடித்தளமாகக் கொண்டு நீதிமன்றங்கள் செயல்பட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

சட்டங்களின் பயன்களை மக்களுக்கு அளிப்பதில் நீதிமன்றங்கள் உறுதியுடன் இருக்க வேண்டுமென்றும், தன்னிச்சையான முடிவுகளை நீதிபதிகள் எடுக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

உலகளாவிய இந்திய தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு நாளை புதுதில்லியில் தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைக்கிறார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்துவது, நிர்வாகம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை கொண்டு வருவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இம்மாநாட்டில் பல்வேறு அமர்வுகளில் விவாதிக்கப்பட உள்ளது.

உலக தரத்திற்கு ஏற்ற வகையில் இந்தியாவின் செயற்கை அறிவாற்றலை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த உச்சி மாநாடு ஒரு முக்கிய வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

வர்த்தக ரீதியிலான நிலக்கரி சுரங்கங்களின் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து நிலக்கரித்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலர் திரு நாகராஜ் தலைமையில் இன்று புதுதில்லியில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

நிலக்கரி சுரங்கங்களின் தற்போதைய நிலை மற்றும் ஒட்டுமொத்த உள்நாட்டு நிலக்கரி உற்பத்தியை அதிகரிப்பது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டுக்கான உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு நிறுவனங்கள் உறுதியுடன் செயல்பட வேண்டுமென்று திரு நாகராஜன் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

உத்திரப்பிரதேசத்தின் ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள **Pulrai** என்ற கிராமத்தில் நடைபெற்ற ஆன்மீக நிகழ்ச்சியின்போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து எமது செய்தியாளிடம் தெரிவித்த அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு ராஜேஸ் குமார் சிங், எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் மக்கள் குவிந்ததால் இந்த சம்பவம் நேரிட்டதாகக் கூறினார்.

உயிரிழந்தவர்களில் 25 பேர் பெண்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உத்திரபிரதேச முதலமைச்சா திரு யோகி ஆதித்யநாத் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.,

காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற வேண்டுமென்று தாம் பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்பட்டு விரைந்து நலன்பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்துமாறு காவல்துறைக்கு திரு யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 25 தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், பாக்-ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்த 25 மீனவர்களையும் நேற்று இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாகக் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் இடையூறு விளைவித்து வரும் கச்சத்தீவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான உறுதியான நடவடிக்கையை வெளியுறவு அமைச்சகம் மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

இந்திய அரசு உதவியுடன் இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொள்ளாயிரத்து 34 மழைநீர் சேகரிப்பு டேங்குகள் அமைக்க அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தகவலை தெரிவித்த அந்நாட்டு அமைச்சர் திரு விஜயதாச ராஜபக்சே இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2017-ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தானதாகத் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின்படி யாழ்பாணத்தில் குடிநீர் தேவைக்காக மூவாயிரம் டேங்குகள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆயிரத்து 831 பி வி சி மழைநீர் சேகரிப்பு டேங்குகள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும மாணவர்களுக்கான விசா கட்டணத்தை அந்நாட்டு இரண்டு மடங்குக்கும் கூடுதலாக உயர்த்தியுள்ளது.

இதுவரை 710 டாலராக இருந்த விசா கட்டணம் தற்போது ஆயிரத்து 600 டாலராக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் இந்த முடிவு லட்சக்கணக்கான இந்திய மாணவர்களை பாதிக்கும் வகையில் உள்ளது.

மேலும் ஆஸ்திரேலியா மண்ணை அடைந்த பின் விசா பெறுவதற்காக விண்ணப்பிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஆஸ்திரேலியாவில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் தங்கள் படிப்பை தொடர அங்கேயே விசா நீட்டிப்புப் பெறுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

பிரேசிலின் தெற்கு மாகாணமான ரியோ க்ராண்டியில் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி 179 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 33 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக அம்மாகாணத்தின் பாதுகாப்பு முகமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் **Guaiba** ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் ரியோ க்ராண்டி மாகாணத்தில் 90 சதவீத பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முகமை வெளியிட்டுள்ள மற்றொரு தகவலில் கடந்த இரண்டு மாதங்களில் மோசமான வானிலையினால் அந்த மாகாணத்தில் இரண்டு புள்ளி மூன்று ஒன்பது மில்லியன் குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாகவும், நான்கு லட்சத்து 50 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பிரேசிலின் ரியோ க்ராண்டி மாகாணம் அதிக அளவு விவசாய நிலங்களையும், கால்நடைகளையும் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஜிம்பாப்வேவுக்கு எதிரான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்கேற்க உள்ள இந்திய அணி இன்று ஹராரே புறப்பட்டு சென்றது.

அணியின் கேப்டனாக சுப்மன் கில் செயல்படுவார் என்றும், இடைக்கால பயிற்சியாளராக வி வி எஸ் லஷ்மண் செயல்படுவார் என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

ஜிம்பாப்வேயில் வரும் ஆறாம் தேதி முதல், 14-ஆம் தேதி வரை நடைபெறும் ஐந்து டுவெண்டி – டுவெண்டி போட்டிகளில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

ஜிம்பாப்வே-க்கு எதிரான முதல் இரண்டு போட்டிகளில் இந்த அணியில் இடம்பெற்றுள்ள சஞ்ஜு சாம்சன், சிவம் தூபே, ஜெய்ஸ்வால் ஆகியோருக்குப் பதிலாக, சாய் சுதர்சன், ஜிதேஷ் சர்மா, ஹர்ஷித் ராணா ஆகியோர் விளையாடுவார்கள் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கோப்பையை வென்ற இந்திய வீரர்கள் பார்படாஸில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இந்தியா திரும்பாத நிலையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

***End of News***